# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை—600 032

தொலைபேசி: 044—22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை—600 032

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

......

முறையீட்டு மனு எண்: 166/2017/மா

ஆணை நாள்: 20/03/2019

திரு. அல்லூர் ஸ்ரீநிவாசன்,
புத்தூர், திருச்சி. --- முறையீட்டு மனுதாரர்

1. திருமதி. விஜயலெட்சுமி, முன்னாள் ஆணையர்,
2. திரு. ரவிசந்திரன், முன்னாள் ஆணையர்
3. திரு. ரவீந்திரன், உதவி செயற் பொறியாளர்,
4. திரு. ரகுராமன், இளநிலை பொறியாளர்
   திருச்சிராப்பள்ளி மாநகராட்சி --- எதிர் மனுதாரர்கள்

திருச்சி மாநகராட்சி, கதவு எண்.03, ஆபிசர்ஸ் காலனி, புத்தூர் என்ற முகவரியில் வசிக்கும் திரு. அல்லூர் ஸ்ரீநிவாசன் என்பவரது 2.8.2017 நாளிட்ட முறையீட்டு மனு 07.08.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு முறையீட்டு மனு எண்.166/மா/2017 என எண்ணிடப்பட்டு, அறிக்கை பெறப்பட்டு, கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை:

திரு. அல்லூர் ஸ்ரீநிவாசன், திருச்சி என்பவர் தனது 02.08.2017 நாளிட்ட முறையீட்டு மனுவில் திருச்சி மாநகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தனி நபர் கழிப்பறைகள் கட்டும் திட்டம் செயல்பட்டு வருகின்றது என்றும், இதற்காக பயனாளிகளுக்கு ரூ.8000/- மானியம் வழங்கப்பட்டு வருகிறது என்றும், இத்திட்டத்தின் கீழ் திருச்சி மாநகராட்சியின் அனைத்து

கோட்டங்களிலும் 1900 கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளதாக கணக்கு காட்டப்பட்டுள்ளது என்றும், மத்திய அரசின் இந்திய தரக்குழு கடந்த ஜனவரி மாதம் 5,6,7 தேதிகளில் ஆய்வு செய்த போது பொன்மலை கோட்டத்தில் மட்டும் 100க்கும் அதிகமான கழிப்பறைகள் கட்டாமலேயே கட்டியதாக கணக்கு காட்டப்பட்டு நிதியை மாநகராட்சி அதிகாரிகள் திரு. ரவீந்திரன், உதவி செயற் பொறியாளர், திரு. ரகுராமன், இளநிலை பொறியாளர் மற்றும் முன்னாள் ஆணையர், திருமதி. விஜயலட்சுமி ஆகியோர்கள் பயனாளிகளுக்கு மானியத் தொகையான ரூ.8000/-ல் ரூ.1500/- மட்டும் பயனாளிகளுக்கு வழங்கிவிட்டு ரூ.7,76,000/-ஐ பங்கிட்டு கொண்டதாகவும், இது குறித்து செய்தி நாளிதழ்களில் வெளியானது என்றும், எதிர்மனுதாரர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி தற்போதைய ஆணையர், ரவிச்சந்திரனிடம் சமூக ஆர்வலர்கள் S.M.S. மூலம் அனுப்பப்பட்ட புகார் மீது நடவடிக்கை எடுக்காமல் தற்போதைய ஆணையர், எதிர்மனுதாரர்களிடம் ரூ.2,00,000/- லஞ்சமாக பெற்றுக் கொண்டு பெயரளவுக்கு 4-ம் எதிர்மனுதாரரை (ரகுராமன், இளநிலை பொறியாளர்) அரியமங்கலம் கோட்டத்திற்கு இடமாற்றம் செய்துவிட்டு 3ம் எதிர்மனுதாரரை (ரவீந்திரன், •உதவி செயற்பொறியாளர்) தொடர்ந்து அதே கோட்டத்தில் பணியுரிய உத்திரவிட்டுள்ளார் என்றும் இது குறித்த விசாரணை மேற்கொண்டு முறைகேடுகளில் ஈடுபட்ட எதிர்மனுதாரர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு மீதான அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்க திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவத்தின் 11.8.2017 நாளிட்ட அறிவிப்பாணையின்படி ஆணையிடப்பட்டது.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் தனது 04.09.2017 நாளிட்ட அறிக்கையில் இதே பொருள் தொடர்பாக ஒரு சில நாளிதழ்களில் பிரசுரம் ஆன செய்தியின் அடிப்படையில் உரிய அறிக்கை சமர்ப்பிக்க அசல் மனு எண்.09/2017ல் உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் ஆணையிடப்பட்டதின் அடிப்படையில் உரிய அறிக்கை மற்றும் இதன் தொடர்பான ஆவணங்கள் அனுப்பி வைக்கப்பட்டதனையடுத்து, முறையீட்டு மனு எண்.09/மா/2017 ஆணை எண்.84/2017 நாள்:03.05.2017ல் செய்திகளில் உண்மை தன்மை இருப்பது கண்டறியும் பட்சத்தில் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்றும், தூய்மை இந்தியா திட்டத்தை செயல்படுத்துவதில் தரவரிசையில் முதல் இடத்தை பெறுவதற்கு அலுவலர்கள் முனைப்புடன் செயல்படுதல் வேண்டும்

என ஆணையத்தால் ஆணையிடப்பட்டுள்ளது என்றும், தெரிவித்துள்ளார். மேலும், திரு. அல்லூர் ஸ்ரீநிவாசன் என்பவரின் 02.08.2017 நாளைய புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள புகார்கள் யாவும் எவ்வித அடிப்படை ஆதாரமின்றி கொடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும், 20.09.2017 நாளிட்ட அறிக்கையில் தனி நபர் கழிப்பிடம் கட்டும் பணி தொடர்பாக நான்கு கோட்ட அலுவலர்கள் மூலம் உரிய தல ஆய்வு மேற்கொண்டு பெறப்பட்ட தொகுப்பு விவரப்பட்டியல் அனுப்பி வைத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் 23.11.2017 அன்று இம்முறைமன்ற நடுவ அலுவலகத்தில் விசாரணைக்கு வருகை தந்து விளக்கம் அளிக்குமாறு 20.09.2017 நாளிட்ட அழைப்பாணையின்படி ஆணையிடப்பட்டது. ஆனால் முறையீட்டு மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகி தனது விளக்கத்தினை அளிக்கவில்லை.

இந்நேர்வில் 27.03.2017 நாளிட்ட அறிக்கையில் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் 1900 எண்ணிக்கையிலான தனி நபர் கழிப்பிடங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டது என்றும், அவற்றில் 2015-2016 மற்றும் 2016-2017ஆம் வருடங்களில் முறையே 760 மற்றும் 1140 கழிப்பிடங்கள் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டதாகவும், 1900 கழிப்பிடங்களும் கட்டி முடிக்கப்பட்டதாகவும், 1349 கழிப்பிடங்களின் பயனாளிகளுக்கு அவரவர் வங்கி கணக்கிலும், மீதமுள்ள 551 கழிப்பிடங்கள் மாநகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் மூலம் கட்டி முடிக்கப்பட்டு ஒப்பந்ததாரர்களின் வங்கி கணக்கிலும் தொகை செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் இத்திட்டத்தின் கீழ் ரூ.12,000/- மதிப்பில் கட்டப்படும் கழிப்பறைகளுக்கு பயனாளிக்கு மானியமாக ரூ.4000/- மத்திய அரசால் வழங்கப்பட்டு வருகிறது என்றும் மாநில அரசும் மாநகராட்சியும் தலா 2000/- மானியம் வழங்குகின்றன என்றும் மீதித் தொகை ரூ.4000/- பயனாளிகள் தங்கள் பங்காக செலுத்த வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 2015-16 மற்றும் 2016-2017 ஆண்டிற்கு முறையே 760 மற்றும் 1140 ஆக 1900 கழிப்பிடங்கள் கட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 1349 கழிப்பிடங்கள் பயனாளிகளுக்கு அவரவர் வங்கி கணக்கிலும் மீதமுள்ள 551 கழிப்பிடங்கள் மாநகராட்சி ஒப்பந்ததாரர்கள் மூலம் கட்டி முடிக்கப்பட்டு, ஒப்பந்ததாரர்கள் வங்கிக் கணக்கில் தொகை செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். கழிப்பிடம் கட்டும் பணிகள் தொடர்பாக நான்கு கோட்ட அலுவலர்கள் மூலம் தல ஆய்வு

மேற்கொள்ளப்பட்டு தொகுப்பு விபர பட்டியல் சமர்ப்பித்துள்ளார். மேலும், திரு. அல்லூர் ஸ்ரீநிவாசன் என்பவரது 2.8.2017 தேதிய புகார் மனுவில் தெரிவிக்கப்பட்ட புகார்கள் யாவும் எவ்வித அடிப்படை ஆதாரமின்றி கொடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். முறையீட்டு மனுதாரரும் விசாரணைக்கு ஆஜராகி தனது புகார் சம்மந்தமான தனது விளக்கத்தினையோ, ஆவணங்களையோ சமர்ப்பிக்கவில்லை. எனவே, இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீடுகள் குறித்து, ஆதார ஆவணங்கள் மற்றும் விளக்கங்கள் ஏதும் முறையீட்டு மனுதாரரால் இம்முறைமன்ற நடுவத்தின் முன் சமர்ப்பிக்காத நிலையில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையரின் அறிக்கையை ஏற்று, இம்முறையீட்டு மனு மீதான மேல் நடவடிக்கையை கைவிடலாமென முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019-ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 20-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

1. திரு. அல்லூர் ஸ்ரீநிவாசன்,
   சமூக செயற்பாட்டாளர்,
   3, ஆபிசர்ஸ் காலனி,
   புத்தூர், திருச்சிராப்பள்ளி,
   திருச்சி 620 017.

2. ஆணையர்,
   திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
   திருச்சிராப்பள்ளி.

நகல்
முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
செயலரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ. கோ. / உதிரி